செ.வெ.எண்: 44 நாள்: 16.03.2017

**புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள தனியார் நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க உரிமையாளர்கள் முன்வர வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் அனைத்து தனியார் நிறுவனங்களிலும் வேலை வாய்ப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு சம வாய்ப்பு மற்றும் உரிமைகள் வழங்கி பாகுபாடு களைவதை உறுதி செய்வதற்கான உணர்வூட்டும் பயிற்சி வகுப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.03.2017) நடைபெற்றது.

இந்த தனியார் நிறுவனங்களுக்கான உணர்வூட்டும் பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

மத்திய மற்றும் மாநில அரசுகள் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக பல்வேறு நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தி வருகிறது. இதன்படி கல்வி உதவித்தொகை, கடன் உதவித்தொகை, திருமண உதவித்தொகை, பராமரிப்பு உதவித்தொகை மற்றும் உதவி உபகரணங்கள் வழங்கி வருவதுடன் மாற்றுத்திறனாளிகளுக்கான நலச்சட்டம்1995ன்படி மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பில் 3 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருவதுடன் அவர்களுக்கு தேவையான கல்வி, சிறப்புக்கல்வி, மருத்துவசிகிச்சை, கடனுதவி மற்றும் மறுவாழ்வு உதவிகள் வழங்கி பாகுபாடுகளை களைய தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்கள் பணிபுரியக்கூடிய இடங்களில் தங்கு தடையற்ற சுற்றுச்சூழலை உருவாக்கி தந்து மற்றவர்களுக்கு இணையாக பணிகளை உருவாக்கி தருவதுடன் வேலை வாய்ப்புகளை பெறுவதற்கு தேவையான பயிற்சிகள் அளித்து ஊக்கமும், ஆக்கமும் தனியார் நிறுவனங்கள் அளிக்கும் வகையில் இந்த உணர்வூட்டும் பயிற்சி வகுப்பு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் வேலைவாய்ப்பில் 3 சதவீதம் இடஒதுக்கீடு முறையை அரசுத்துறைகளில் மட்டும் பின்பற்றப்படுவதுடன் மட்டுமல்லாமல் தனியார் துறைகளிலும் மாற்றுத்திறனாளிகளின் திறமைக்கு ஏற்றவாறு வேலைவாய்ப்புகளை வழங்குவதன் மூலம் மாற்றுத்திறனாளிகள் பொருளாதார ரீதியாக மேம்பாடு அடைய முடியும்.

மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் வழங்குவதற்காக மாவட்ட நிர்வாகம் சார்பில் சிறப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இதன்படி முதற்கட்டமாக 10.03.2017 அன்று புதுக்கோட்டை அரசு மகளிர் கலைக்கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு தேர்வானவர்களுக்கு அன்றே வேலைவாய்ப்பு ஆணைகள் வழங்கப்பட்டதுடன், இரண்டாம் கட்ட முகாம் 17.03.2017 அன்று ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. எனவே அனைத்து மாற்றுத்திறனாளிகளும் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும். மேலும் நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் நிறுவனங்களிலும் அதன் உரிமையாளர்கள் வேலைவாய்ப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு சம வாய்ப்பு வழங்கி அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகை செய்ய வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இப்பயிற்சி வகுப்பில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சரவணக்குமார், உதவி இயக்குநர் (மா.தொ.மை) திருமதி.திரிபுரசுந்தரி, இளநிலை மறுவாழ்வு அலுவலர் திரு.வசந்தராமகுமார், ரெனேசான்ஸ் தொண்டு நிறுவன மேலாண் இயக்குநர் திரு.மகாலிங்கம், தனியார் நிறுவன உரிமையாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**